# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure )

## IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM

| | | |
|---|---|---|
| SC.No. | : | 61/2023 |
| P.W. | : | 4 |
| Name | : | திரு. ரங்கநாதன் |
| Husband/Father Name | : | திரு. ரவி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 35 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 06.10.2025.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் விண்ணம்பள்ளி, கவுண்டம்பாளையத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். இறந்துபோன மகேந்திரன் எனது உறவினர். அண்ணன் முறை. அவர் கடந்த 02-02-2021 அன்று ஆஜர் எதிரிக்கும், என் அண்ணனுக்கும் ஒரு வாக்குவாதம் ஏற்பட்டு அதில் அவர் இறந்துபோய்விட்டதாக கேள்விப்பட்டேன். போலீசார் பெருந்துறை அரசு மருத்துவமனையில் வைத்து அவரது உடலின்மீது பிரேத விசாரணை மேற்கொண்டார்கள். அந்த சமயத்தில் நான் சாட்சியாக

இருந்தேன். இது குறித்து போலீசார் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லைஎன்பதால் யார் யாருக்கு எப்படி பிரச்சனை ஏற்பட்டு அவர் எப்படி இறந்துபோனார் என்று எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். நான் அய்யன்சாலையில் குடியிருக்கிறேன்.

**மறு விசாரணை இல்லை.**

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure )

## IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM

| | | |
|---|---|---|
| SC.No. | : | 61/2023 |
| P.W. | : | 5 |
| Name | : | திரு. பாக்கியராஜ் |
| Husband/Father Name | : | திரு. ரங்கசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 38 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 06.10.2025.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் விண்ணம்பள்ளி , பெரியசாத்தனூரில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் 1வதாக உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். என்னுடன் ஜெயமுருகன் என்பவர் சாட்சி கையெழுத்து போட்டார். 01-02-2021 அன்று இரவு 10 மளி அளவில் போலீசார் விண்ணம்பள்ளி கிராமத்தில் உள்ள கல்யாண மண்டபம் அருகே அதாவது சமுதாய கூடம் கொலை நடந்தது சம்பந்தமான இடத்தை பார்வையிட்டனர். அங்கு

இறந்துபோன மகேந்திரனின் உடல் இருந்தது. அவரை போலீசார் பார்த்தார்கள். அந்த இடத்தை போலீசார் படம் வரைந்து என்னிடமும், ஜெயமுருகன் என்பவரிடமும் கையெழுத்து பெற்றனர். **பார்வை மகசர் அ.சா.ஆ.2.** போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னுடன் சாட்சி கையெழுத்த போட்ட நபரின் பெயர். ஊர் எனக்கு தெரியாது என்றால் தெரியும். நான் சம்பவ சமயத்தில் பக்கத்தில் இருந்த சொசைட்டியில் இரவு காவலராக பணியாற்றி வந்தேன் என்றால் சரிதான். அன்றைய தினத்தில் எத்தனை மணிக்கு பணிக்கு வந்தேன் என்றால் மாலை 6 மணிக்கு. சம்பவ இடத்திற்கு போலீசார் எப்போது வந்தார்கள் என்றால் இரவு 10 மணி இருக்கும். நான் 6 மணிக்கு பணிக்கு வந்திருந்தாலும் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றால் ஆமாம். போலீசார் வந்தபிறகு தான் சென்றேன். நான் வேலை செய்யும் சொசைட்டிக்கு மேபுறமாக அங்கன்வாடி மையம் உள்ளது என்றால் சரிதான். அங்கன்வாடிக்கு மேபுறமாக சிஜஜி சர்ச் மற்றும் குடியிருப்பு பகுதிகள், பஞ்சாயத்து ஆபீஸ் உள்ளது என்றால் ஆமாம். வசந்தி மற்றும் அல்லிமுத்து ஆகியோர்களின் வீட்டிற்கு கிழபுறமாக மேலும் 2 வீடுகள் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்த ரோடானது சத்தி மெயின்ரோடு அல்ல விண்ணம்பள்ளி பெரியசாத்தனூர் ரோடு என்றால் சரிதான். நான் போலீசார் கேட்டுக்கொண்டதன்பேரில் அ.சா.ஆ.2 ல் சாட்சி கையெழுத்து போட்டேன் என்றும், சம்பவம் நடந்த இடத்தில் வைத்து சாட்சி

கையெழுத்து போடவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை  இல்லை.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure )**

**IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM**

| | |
|---|---|
| SC.No. | : 61/2023 |
| P.W. | : 6 |
| Name | : திருமதி. தங்கமணி, கி.நி.அ. |
| Husband/Father Name | : திரு. முத்துசாமி |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 41 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 06.10.2025.

எதிரி ஆஜர்.

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் பூசாரிபாளையம் கிராம நிர்வாக அதிகாரியாக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு விண்ணம்பள்ளி கி.நி.அதிகாரியாக பணியாற்றி வந்தேன். ஆஜர் எதிரியைத் தெரியும். கடந்த 02-02-2021 அன்று நானும், எனது கிராம உதவியாளரும் எங்களது அலுவலகத்தில் இருக்கும்போது காலை சுமார் 9 மணி அளவில் விண்ணம்பள்ளி அரிஜன காலனியை சேர்ந்த ஆஜர் எதிரி எங்கள் முன்பாக வந்து சரணடைந்து அதற்கு முந்தைய நாள் இரவு 01-02-2021 அன்று 6 மணி சுமாருக்கு

அன்னேகவுண்டன்பாளையத்தை சேர்ந்த மாறன் மகன் மகேந்திரன் என்பவரை தன் வீட்டின் முன்பாக வைத்து அடித்து கொலை செய்துவிட்டதாக சொல்லி சரணடைந்து வாக்குமூலம் கொடுத்தார். அவர் சொன்ன வாக்குமூலத்தை நான் பதிவுசெய்துகொண்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் வாக்குமூலம் அவரால் சொல்லப்பட்டு என்னால் பதிவுசெய்யப்பட்டது. அதில் ஆஜர் எதிரியும் கையெழுத்துசெய்துள்ளார். கிராம உதவியாளரும், நானும் கையெழுத்து செய்துள்ளோம். **மேற்படி ஆவணம் அ.சா.ஆ.3.** மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவுசெய்த பின்னிட்டு நான் ஆஜர் எதிரியை புளியம்பட்டி காவல்நிலையத்திற்கு அழைத்துசென்று ஆஜர்படுத்தினேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தற்போது அரியப்பம்பாளையத்தில் குடியிருக்கிறேன். சம்பவம் நடந்த சமயத்திலும் அரியப்பம்பாளையத்தில் தான் குடியிருந்தேன். சம்பவம் நடந்த அன்று எத்தனை மணிக்கு அலுவலகம் வந்தேன் என்றால் காலை 7.30 மணிக்கு வந்துவிட்டேன். எனது உதவியாளர் எத்தனை மணிக்கு வந்தார் என்றால் அவர் எனக்கு முன்பாகவே வந்துவிட்டார். நான் எத்தனை மணிக்கு ஒப்புதல் வாக்குமூலத்தை எழுத ஆரம்பித்தேன் என்றால் அவர் வந்தவுடனேனே எழுத ஆரம்பித்தேன். எத்தனை மணிக்கு ஒப்புதல் வாக்குமூலம் எழுதி முடித்தேன் என்றால் 9.45 மணி இருக்கலாம். என்னுடைய அலுவலகத்தில் கிராம உதவியாளரைத் தவிர வேறு பொதுமக்கள் யாரும் இருக்கவில்லை என்றால் ஆமாம். எனது உதவியாளர் எங்கு குடியிருக்கிறார் என்றால் வரப்பாளையத்தில் குடியிருக்கிறார். கொலை சம்பவம் குறித்து எனக்கு எப்போது யார் தகவல்

சொன்னார்கள் என்றால் பொதுமக்களில் ஒரு நபர் இரவு 11 மணிக்கு போன்மூலமாக தகவல் சொன்னார். நான் புளியம்பட்டி காவல்நிலையத்திற்கு எதிரியை எத்தனை மணிக்கு அழைத்துசென்றேன் என்றால் காலை 10 மணிக்கு அலுவலகத்திலிருந்து கிளம்பினேன். எத்தனை மணிக்கு காவல்நிலையம் சென்றேன் என்றால் 20 நிமிடத்தில் சென்றிருப்போம். நான் எந்த வாகனத்தில் சென்றேன் என்றால் நானும், எனது உதவியாளரும் இருசக்கர வாகனத்தில் சென்றோம். எதிரியை எந்த வாகனத்தில் அழைத்துசென்றோம் என்றால் காரில் அழைத்துசென்றோம். அவ்வாறு அழைத்துசென்றதாக கூறும் காரின் பதிவு எண் என்னவென்றால் 4 ஆண்டுகள் ஆனதால் காரின் பதிவு எண் நினைவில்லை. காரை யார் ஓட்டிவந்தது என்றால் விண்ணம்பள்ளியை சேர்ந்தவர் ஓட்டிவந்தார் அவரது பெயர் தற்போது நினைவில்லை. காருக்கு யார் தகவல் கொடுத்தது என்றால் நான் தான் அழைத்தேன். எதிரியை காரில் அழைத்துசென்றது குறித்து போலீசார் விசாரிக்கும்போது நான் சொல்லவில்லை என்றால் சரிதான். போலீசார் டிரைவரை விசாரித்தார்களா என்றால் தெரியாது. காவல்நிலையத்திற்கு எதிரியை அழைத்துசென்று யாரிடம் ஒப்படைத்தேன் என்றால் பெண் ஆய்வாளர் இருந்தார் அவரிடம் ஒப்படைத்தேன். நான் பதிவுசெய்த ஒப்புதல் வாக்குமூலத்தை அப்போதே போலீசாரிடம் கொடுத்துவிட்டேனா என்றால் ஆமாம். அன்றைய நாளுக்கு பின்னிட்டு போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. எனது உதவியாளரையும் அதற்கு பின்னிட்டு விசாரித்தார்களா இல்லையா என்று எனக்கு தெரியாது என்றால் ஆமாம். என்னுடைய அலுவலகத்திற்கும், சம்பவம் நடந்த இடத்திற்கும் இடையே 1 பர்லாங் தூரம் இருக்குமா என்றால் 50 மீ ட்டர் இருக்கும்.

சம்பவம் நடந்த இடத்திற்கு மேபுறமாக கூட்டுறவு வங்கி சொசைட்டி உள்ளது என்றால் சரிதான். அதற்கு மேபுறமாக அங்கன்வாடி மையம் உள்ளது என்றால் சரியாக தெரியவில்லை. கூட்டுறவு வங்கிக்கு பின்புறமாக சமுதாக கூடம் உள்ளது. கூட்டுறவு வங்கிக்கு ஒட்டி கிழபுறமாக சமுதாய கூடம் உள்ளது என்றால் திசை சரியாக தெரியவில்லை. எங்கள் அலுவலகம் மற்றும் கூட்டுறவு வங்கி இருக்கும் சாலையானது விண்ணம்பள்ளி பெரியசாத்தனூர் ரோடு என்றால் சரிதான் அது சத்தி மெயின்ரோடு அல்ல. சத்தி - புளியம்பட்டி மெயின்ரோட்டிலிருந்து கிழபுறமாக பிரியும் ரோட்டிற்கு வடபுறமாக சர்ச், மற்றும் அதன் குடியிருப்புகள் மற்றும் பெட்டி கடை உள்ளது என்றால் சரிதான். எதிரி குடியிருக்கும் வீட்டை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். என்னிடம் எதிரி எந்தவிதமான ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதன்பேரில் எதிரியிடம் ஒரு கையெழுத்துபெற்றுக்கொண்டு இந்த வழக்கிற்கு ஏற்றாற்போல் அது ஒப்புதல் வாக்குமூலமாக போலீசார் ஏற்படுத்திக்கொண்டார்கள், போலீசாருக்கு ஆதரவாக நானும், கிராம உதவியாளரும் கையெழுத்துசெய்துவிட்டோம் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure )**

**IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM**

| | | |
|---|---|---|
| SC.No. | : | 61/2023 |
| P.W. | : | 7 |
| Name | : | திரு. பாலன் |
| Husband/Father Name | : | திரு. சுப்புநாயக்கர் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 41 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 06.10.2025.

எதிரி ஆஜர்.

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் பெரியசாத்தனூரில் குடியிருந்து, விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். 01-01-2021 அன்று விண்ணம்பள்ளியில் ஒரு சண்டை நடந்தது என்று நான் கேள்விப்பட்டேன். 02-02-2021 அன்று ஆஜர் எதிரியை கிராம நிர்வாக அதிகாரி மூலமாக புளியம்பட்டி காவல்நிலையத்திற்கு அழைத்துசென்று ஆஜர்படுத்தியுள்ளதாக கேள்விப்பட்டு நானும், ரவி என்பவரும் காவல்நிலையம் சென்றோம். அப்போது ஆஜர் எதிரி ஆய்வாளர் முன்பாக குற்ற சம்பவத்தை

தான்தான் செய்ததாக ஒப்புக்கொண்டு ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதில் நானும், ரவி என்பவரும் சாட்சிகளாக கையெழுத்துசெய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல்வாக்குமூலத்தில் 1வதாக உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். 2வதாக உள்ள சாட்சி கையெழுத்து ரவி என்பவருடையது. **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வதாக உள்ள சாட்சி கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.4.** ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

01-02-2021 அன்று காலையில் என் பாட்டி இறந்துவிட்டார் என்றால் இல்லை. எத்தனை மணிக்கு காவல்நிலையம் சென்றேன் என்றால் காலை சுமார் 10 மணி இருக்கும். ரவி என்பவர் எத்தனை மணிக்கு வந்தார் என்றால் நாங்கள் இருவரும் ஒன்றாகத் தான்சென்றோம். எனக்கு எத்தனை மணிக்கு தகவல் கிடைத்தது என்றால் காலை 9 அல்லது 9.30 மணி இருக்கும் சரியாக நினைவில்லை. நானும், ரவியும் எத்தனை மணிக்கு எங்கு சந்தித்தோம் என்றால் நான் என் வீட்டில் இருந்தேன் அவர் என் வீட்டிற்கு வந்தார். எங்கள் இருவரது வீடும் அருகருகே உள்ளது. சரியாக நேரம் தெரியவில்லை 10 மணிக்கு காவல்நிலையம் சென்றோம். ஒப்புதல் வாக்குமூலத்தை யார் எழுதியது என்றால் காவல் ஆய்வாளர் எழுதினார் எதிரி சொல்ல சொல்ல எழுதினார். அதில் எத்தனை மணிக்கு கையெழுத்து செய்தோம் என்றால் 10 மணிக்கு காவல்நிலையத்தில் இருந்தோம் கையெழுத்துசெய்த நேரம் சரியாக தெரியவில்லை. என் வீட்டிற்கும், காவல்நிலையத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் என்றால் 11 கி.மீ. சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதன்பேரில் ஒப்புதல்

வாக்குமூலத்தில் சாட்சியாக கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**